**செ.வெ.எண்:21/ஜூன்** **நாள்:11.06.2016**

# இராமநாதபுரம் மாவட்டம்

## அனைத்து வருவாய் வட்டங்களில் உள்ள ஒரு கிராமத்தில் 11.06.2016 (நாளை) பொது விநியோகத் திட்ட குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமை மாவட்டத்தின் அனைத்து வட்டங்களிலும் ஒரு கிராமத்தில் சுழற்சி முறையில் பொதுவிநியோகத்திட்ட குறைதீர் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக ஜீன் 2016 மாதத்தில் கீழ்க்காணும் கிராமங்களில் நடத்தப்பட உள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம் கழனிக்குடி, இராமேஸ்வரம் வட்டம் ஏர்காடு, திருவாடானை வட்டம் மணலூர், பரமக்குடி வட்டம் மஞ்சக்கொள்ளை, முதுகுளத்தூர் வட்டம் மகிண்டி, கடலாடி வட்டம் கருங்குளம், கமுதி வட்டம் நத்தம், கீழக்கரை வட்டம் மேதலோடை உட்பட்ட பகுதிகளில் பொதுவிநியோகத் திட்டம் சம்பந்தமான தங்களின் குறைகள் மற்றும் புகார்களை பொதுமக்கள் நேரில் தெரிவிப்பதற்காக குறைதீர்க்கும் கூட்டம் வரும் 11.06.2016 (சனிக்கிழமை) காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது. இக்குறைதீர் முகாமில் பொதுமக்கள் புதிய குடும்ப அட்டை, நகல் அட்டை, பெயர் சேர்த்தல், பெயர் திருத்தம், பெயர் நீக்கல், முகவரி மாற்றம் போன்றவை தொடர்புடைய மனுக்களை அளித்து பயன்பெறலாம் என இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**